கோகிலா மகேந்திரன்

# அறிவியல் கதைகள்



சோலைக்குயில் அவைக்காற்றுக்கள வெளியீடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகிலா மகேந்திரன்

# சிறுவருக்கான அறிவியல் கதைகள்

## (5ஆம், 6ஆம், 7ஆம் தர மாணவருக்கு)

சோலைக்குயில் அவைக்காற்றுக்கள வெளியீடு
தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Ariviyal Kathaikal
  Stories in Tamil for Grade 5,6,7 Students
  with Scientific information
- By Kohila Mahendran
- Art work by : Nayanabashini Piraveenan
  (Grade - 2 Student)
- First edition : November 2020
- Copy right : Dr. M. Piraveenan
- Published by : Solaikkuyil Avaikkattu Kalam,
  Tellippalai.
- Printers : Amma Printers, Inuvil
- Pages : vi + 26
- Price : 200/=





**உள்ளே...**


| | |
|---|---|
| அணிந்துரை | iii |
| நான் யார்? | 01 |
| நரி மடல் | 05 |
| சொண்டுப் பயணம் | 09 |
| மாசற்றார் கேண்மை | 13 |
| முருகைக் கல்லாருடன் ஒரு பேட்டி | 17 |
| கிள்ளை மொழி | 21 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இது ஒரு சிறுவர்களுக்கான அறிவியற் சிறுகதைத் தொகுப்பு. 5 முதல் 7ஆம் தர மாணவர்களுக்கானது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஈழத் தமிழ் இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டவரும், சிறந்த படைப்புகளின் ஆசிரியருமான கோகிலா மகேந்திரன் அவர்களின் கைவண்ணத்தில் உருவாகிய நூல் இது. சிறுகதை, நாவல், சிறுவர் கதைகள், இலக்கியக் கட்டுரைகள், உரைகள் உள்ளடங்கலான, பன்முகத்தன்மை கொண்ட அவரது படைப்பாற்றலுக்கு மற்றொரு புதிய வடிகாலாக அமைந்திருக்கிறது இத் தொகுப்பு. ஏனெனில் இவை சிறுவர்களுக்கான கதைகளாக இருக்கும் அதே நேரம் அறிவியல் கருத்துக்களை பகிர்பவையாகவும் இருக்கின்றன.

மாணவர்களுடன் ஆசிரியராக இருந்து பெற்ற நீண்ட அனுபவமும், மற்றவர்களின் உணர்வுகளை ஊடுருவி உணர்ந்து அவற்றை வழிப்படுத்தும் உளவள ஆலோசகரான அவரது தன்னார்வப் பணியும் இந்த நூலுக்கு நிறையவே பயன்பட்டிருப்பதை நூலைப் படிக்கும் போது உணர முடிந்தது. சிறுவர்களின் அகவய உணர்வுகளைப் புரிந்து அவர்களுக்கு எதைக் கொடுக்க வேண்டும், எவ்வாறு கொடுக்க வேண்டும் என்பதையிட்டுத் தெளிவான உணர்வுடன் சொல்லப்பட்ட கதைகளாக இவை இருக்கின்றன. எவற்றைச் சொல்லக் கூடாது என்று கருதப்படுபவற்றை அடியோடு தவிர்த்தும் இருக்கிறார்.

வளர்ந்தவர்களுக்கான இலக்கியத்தில் மறைபொருளில் சொல்லுதல், பூடகமாகச் சொல்லுதல், சிலேடைகளைப் பயன்படுத்தல் போன்றவை படைப்பாக்கிய இலக்கியத்திறனின் அடையாளமாகக் கருதப்படுவதுண்டு. ஆனால் சிறுவர் இலக்கியத்தில் இவை அவர்களைக் குழப்பமடையச் செய்துவிடும். அதிலும் முக்கியமாக இவை அறிவியல் உண்மைகளைப் பகிர்ந்து கொள்ளும் கதைகளாக இருக்கின்ற காரணத்தால் வெளிப்படையாகவும் தெளிவாகவும் சொல்லப்பட வேண்டியது அவசியமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை மனதில் கொண்டு, இக் கதைகளில் தனது இலக்கிய ஆற்றலை வெளிப்படுத்தும் நயமிக்க சொல்லாடல் முறையைத் தவிர்த்து சிறுவர்களுக்கு ஏற்றவாறு கதைகளைத் தெளிவாகவும் நேரடியாகவும் சொல்லியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

சிறுவர் இலக்கியத்தின் தன்மை பற்றி அறிஞர்கள், கல்விமான்கள் மற்றும் பெரும்பாலான பெற்றோர்களது எதிர்பார்ப்புகள் மாறிவிட்ட இன்றைய சூழலில் இந்த நூலின் வரவு மிக முக்கியமானதும் வரவேற்கப்பட வேண்டியதுமாகும். உதாரணத்திற்குச் சொல்வதானால் ஆச்சி வடை சுட்ட கதையில் உள்ள நரியின் பொய், புரட்டு, ஏமாற்றுத் தந்திரம் போன்ற அறவழிக்கு ஒவ்வாத தன்மைகளைத் தவிர்க்க வேண்டும் என்ற தற்போதைய நிலைப்பாட்டிற்கு வலுச்சேர்க்கும் வகையிலேயே இவரது கதைகள் அமைந்துள்ளதைக் குறிப்பிடலாம்.

சிறுவர்களுக்குப் புதியவற்றை அறிந்து கொள்வதற்கான ஆர்வம் அதிகமாகும். அந்த வகையில் புதிய களங்களையும் விலங்குகளையும் அறிமுகப்படுத்திச் சிறுவர்களின் ஆர்வத்தைத் தூண்ட வைக்கின்றன இக்கதைகள். தோட்டம், கடல், முருகைக் கற்கள், 'ரியாசிக் கால உலகம்' போன்ற பல மாறுபட்ட களங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் அவர்களது அறிவுப் பரப்பிற்குள் புதிய வெளிச்சங்களைப் பாயவிடுகிறார்.

சிறுவர்கள் பாத்திரமாக வரும் படைப்புகளையே சிறுவர்கள் அதிக ஆர்வத்தோடு படிப்பார்கள் என்பதை சிறுவர் இலக்கியத்தோடு தொடர்புள்ளவர்கள் அறிவார்கள். அந்தவகையில் இங்குள்ள ஒவ்வொரு கதையிலும் அத்தகைய பாத்திரங்கள் இருக்கின்றன. அதே போல விலங்குகள் பறவைகள் போன்ற ஏனைய உயிரினங்கள் பற்றியும் அறிவதற்கு அவர்கள் ஆசைப்படுவார்கள். இன்றைய பசுங்கிளி, டொல்பின், நரி, குருவி மாத்திரமின்றி மறைந்துபோன டைனோசர் உள்ளிட்ட வேறு வேறு விலங்குகளைச் சுற்றிக் கதைகளை அமைத்திருப்பதன் மூலம் அவர்களை ஆர்வத்தோடு படிக்க வைக்கும் உத்தியைச் சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளார்.

கண்டம் விட்டுக் கண்டம் பறக்கும் பறவை, தன் வால் வீச்சினால் சிறு மீன்களை ஒதுக்கி வீசி வலையில் வீழ்த்தும் டொல்பின் போன்ற சிறுவர்களுக்குப் பிடித்தமான சாகசங்கள், விவேக செயற்பாடுகள் போன்றவற்றையும் இக்கதைகளில் காண முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்கள் சலிப்பின்றி வாசிப்பதற்கு ஏற்ப இக்கதைகளைச் சுவாரஸ்யமாகச் சொல்லிச் செல்கிறார். முடிச்சவிழ்ப்பது போலச் சொல்லப்பட்ட 'நான் யார்' கதையில் மட்டுமின்றி, அனைத்துக் கதைகளிலும் அவர்களை வியக்க வைத்து, ஆர்வத்தைத் தூண்டுவதுடன், தொடர்ந்து வாசிக்க வைக்கும் சுவாரஸ்யமான தகவல்கள் ஊடாகவும் அவர்களின் ஈடுபாட்டைத் தக்க வைத்துக் கொள்கிறார்.

நிறைய விஞ்ஞானத் தகவல்களும் அறிவியல் உண்மைகளும் கதையோடு கதையாக பின்னிப் பிணைந்து வருவதால் சிறுவர்களின் அறிவு விசாலிப்பை ஏற்படுத்துவதுடன், புதிய தேடல்களையும் ஊக்குவிக்கவே செய்யும். கதையோட்டத்தில் மூழ்கிக் கிடக்கும் முதல் வாசிப்பில் அவை குழந்தைகளின் கவனத்தைப் பெறாதுவிட்டால் கூட மறுவாசிப்பில் அவை நிச்சயமாக மூளையில் பதியவே செய்யும் என்பதை உணர்ந்து எழுதப்பட்டதாகவே கருத முடிகிறது.

எனவே இவற்றைச் 'சிறுவர் அறிவியல் கதைகள்' என்று சொல்வது மிகவும் பொருத்தமாகவே இருக்கிறது.

சிறுவர் இலக்கியத்தில் சித்திரங்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். கதைகளை அவர்கள் இலகுவாக விளங்குவதற்கு மாத்திரமின்றி அவர்களின் கற்பனைத் திறனை வளப்படுத்தவும் அவை பயன்படுகின்றன. இந் நூலிலுள்ள ஒவ்வொரு கதைக்கும் சித்திரங்கள் தரப்பட்டுள்ளன. அழகான வரைவும் நேர்த்தியான வண்ணங்களும் அவற்றிக்கு அதிக கவர்ச்சியைக் கொடுக்கின்றன.

அத்துடன் அவற்றில் ஒரு குழந்தைத்தனம் இருப்பதையும் உணர முடிந்தது. இவற்றை யார் வரைந்தது என்று வினவிய போது எனக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது.

ஆம். அவற்றை வரைந்தது கோகிலா மகேந்திரன் அவர்களின் பேர்த்தியான நயனபாஷினி ஆவார். வரைந்தது யார் என்று அறிந்த போது எனது ஆச்சரியம் விட்டுப் போயிற்று! ஆம். குழந்தையின் அப்பா, அப்பம்மாவில் இருந்த கலையூற்று வினைத்திறனோடு சிறுமிக்குப் பாயாமல் இருந்திருக்க முடியாதே. அவரது 5 முதல் 7 வயதில் வரையப்பட்டவை இச் சித்திரங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஓவியங்களைத் தவிர ஒவ்வொரு கதைக்கும் வேறு விளக்கப்படங்களும் கொடுக்கப்பட்டிருப்பதானது அழகியல் பசிக்கும், அதே நேரம் அறிவியல் பசிக்கும் தீனிபோடுவதாக அமைந்திருக்கிறது.

இத் தொகுப்பானது ஈழத்துச் சிறுவர் அறிவியல் இலக்கியத்திற்கு ஒரு புது வரவு மட்டுமல்ல அதன் செல்பாதைக்கு வழிகாட்டியாகவும் அமைந்திருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

கைவைத்த துறை அனைத்திலும் ஜொலிக்கும் கோகிலா மகேந்திரன் அவர்கள் இப்பொழுது சிறுவர் அறிவியல் இலக்கியத்திலும் ஈடுபாடு காட்டுவது வரவேற்கத்தக்கது. அவரது தொடர்ச்சியான பங்களிப்பு இதற்கும் வலுச்சேர்க்கும் என்பது திண்ணம். அவருக்கு எனது வாழ்த்துகளும் பாராட்டுகளும் உரித்தாகுக.


**வைத்தியகலாநிதி எம்.கே.முருகானந்தன்**
**முருகானந்தன் கிளினிக்**
**பருத்தித்துறை**
12.10.2020

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. நான் யார்?




எனது சிநேகிதி பாஷாவின் அன்புரிமையுடன் கூடிய வேண்டுகோளுக்கு ஏற்ப நான் இந்தச் சுய சரிதையை எழுதுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஒரு விலங்கு. முள்ளந்தண்டென்பு இருக்கிறது. இருநூற்று நாற்பது மில்லியன் வருடங்களுக்கு முன் 'ரியாசிக்' காலத்தில் முதலில் தோன்றினேன். ஏறத்தாழ இருநூறு மில்லியன் வருடங்களுக்கு முன் நடந்த மிகப்பெரிய ஊழிக் காலத்தில் ஏராளமான விலங்குகள் அழிந்துபோக நாங்கள் அதிகாரம் மிக்க முள்ளந்தண்டுளிகள் ஆகி உலகையே ஆண்டது மிகப்பெரிய கதை. யுராசிக் காலம், கிரிரேசியஸ் காலம் எல்லாம் எங்கள் ஆட்சிதான் கொடி கட்டிப் பறந்தது. வாழ்வு வந்தால் தாழ்வும் வரும் என்று மனிதர்கள் சொல்லுவார்கள். உண்மைதான்!

அறுபத்தாறு மில்லியன் வருடங்களுக்கு முன் நடந்த பேரனர்த்தத்தில் நாங்கள் சுவடே இல்லாமல் மறைந்து போனோம். எல்லாக் கண்டத்திலும் வாழ்ந்த நாங்கள் இன்று மருந்துக்கும் இல்லாமல் போனோம்.


நாங்கள் முட்டையிடும் சாதி. பெரும்பான்மையானவர்கள் கூடும் கட்டுவோம். மிகவும் சுறுசுறுப்பான ஆட்கள். சமூக ஊடாட்டத்திற்காக ஏராளமான இசைவாக்கங்களை விருத்தி செய்திருந்தோம். 'தக்கன பிழைத்து வாழும்' என்று டார்வின் சொன்னாரா? தக்கனவாய் இருந்த நாங்கள் தகாதனவாய்ப் போனோம். எல்லாமே பாழாய்ப் போன பழங்கதை ஆயிற்று.

எனது தனிப்பட்ட பெயர் இரண்டு பகுதிகளைக் கொண்டது. கிரேக்க மொழியில் எனது பெயரின் முதல் பகுதிக்குக் 'கூரை' என்று அர்த்தம். இரண்டாவது பகுதி 'பல்லி' என்று பொருள்படும். நான் ஒரு 'கூரைப்பல்லி' என்று அவர்கள் ஏன் நினைத்தார்களோ தெரியவில்லை. ஆனால் நான் நீங்கள் நினைக்கிற பல்லி மாதிரிச் சிறிய உருவம் இல்லை. தாவர பட்சணிதான் என்றாலும் பெரிய உருப்படிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டையான முன்னங்கால், நீளமாக பின்னங்கால், முதுகு ஒரு வட்டத்தின் பரிதி போல வளைந்திருக்கும். வால் பல வேல்களைக் கொண்ட தோற்றத்தில் நிமிர்ந்து நிற்கும். வாலுக்கு எனது உடல் வெப்பநிலையைப் பேணும் வேலை ஒன்று இருந்தாலும், பாதுகாப்புத்தான் முக்கியம்!



'வேலன்று வென்றி தருவது' என்று வள்ளுவர் சொல்லுகிற போதும் வேல்தான் அரசனுக்கு வெற்றி தருவது என்று மனிதர்கள் நினைப்பார்கள் என்று கருதுகிறார். எனது வாழ்வின் வெற்றிக்கு மிக நிச்சயமாய் எனது வாலின் வேல் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கழுத்துக் கட்டைதான். தலையும் சிறிது. அதனால் கர்வம் இல்லை. நிலத்தோடு ஒட்டி வளரும் செடிகள், பற்றைகள்தான் சாப்பாடு. எனது தாடை மேலும் கீழும் மட்டுந்தான் அசையும். பக்கப் பாட்டிற்கு அசைவது கடினம்.

இந்த நூற்றாண்டு மனிதர்கள் மத்தியில் நான் வலு புகழ்பெற்ற, ஆய்வுக்குரிய விலங்கு. என்னை வைத்துப் படம் எடுத்திருக்கிறார்கள் என்றால் பாருங்கள்! எனக்கு முத்திரை வேறு வெளியிட்டிருக்கிறார்கள். உங்கள் நாட்டின் நாவலர் பெருமான் மாதிரி, சேர். பொன். இராமநாதன் மாதிரி நான் பெரிய ஆள்தானே?

இப்போது சொல்லுங்கள்! நான் யார்? ஆ... நீங்கள் சொல்வது சரி. எனது பெயர் ஸ்ரெகோ சோறஸ். நான் ஒரு டைனோசர்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. நரி மடல்

**காடு,**
**21-09-2020.**
**அன்புள்ள பாஷினி,**

உங்கள் மின்னஞ்சல் பார்த்து நான் மகிழ்ந்து சிரித்தேன். என் முகத்தில் பெருமை ஜரிகை கட்டியது. எனது நண்பி பாஷினி இவ்வளவு சிறந்த ஓவியரா? என்னை எப்படி மிகத் தத்ரூபமாக வரைந்து அனுப்பியிருக்கிறாள்? எனது தட்டையான மண்டையோடு, நிமிர்ந்த முக்கோண வடிவமான காது, கூரான மூக்கு, நீண்ட தூரிகை வால் எல்லாம் அசல்! மற்றைய படத்தில் பனிக்காலத்தில் என்னைப் பற்றிய அவளின் கற்பனை அமோகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதாபிமானமே - இல்லை நரிஅபிமானமே -இல்லாத பணமூட்டைகள் சென்ற வாரம் என்னைப் பிடிப்பதற்குப் பொறி வைத்திருந்தார்கள். நான் மிகுந்த புத்திசாலி. தந்திரத்துக்கே பெயர் போன விலங்கு என்று இந்த முட்டாள் மனிதர்களுக்குத் தெரியவில்லை. நான் அகப்படவில்லை. தப்பிவிட்டேன். எனக்கு இவர்களின் வியூகம் புரியும். அகப்பட்டிருந்தால் இன்று உங்களுக்குப் பதில் மின்னஞ்சல் எழுதியிருக்க முடியாது.

ஓமோம். நீங்கள் சொன்னது சரி. இலங்கைத் தமிழர் மாதிரி எங்கள் ஆட்களும் உலகத்தில் எல்லாக் கண்டங்களிலும் இருக்கிறோம். அண்டாட்டிக் வட்டத்தில் மட்டும் இல்லை.

இப்பொழுது உங்கள் முக்கியமான கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும். நீங்கள் என்னை உங்கள் செல்லப் பிராணியாக உங்கள் வீட்டில் வளர்க்கலாம். இலேசாக உங்களோடும் உங்கள் வீட்டில் நிற்கும் பூனை, நாயோடும் நான் சிநேகிதமாகி விடுவேன். எனக்குப் பந்து விளையாடப் பிடிக்கும். வாங்கித் தந்தால் விளையாடுவேன். விளையாட்டில் ஆக்கத்திறன் பிரயோகித்துப் புதிய விளையாட்டுக் கண்டுபிடித்து உங்கள் “பொன் பொன்” நாயுடன் விளையாடுவேன். அவரோடு கட்டிப்புரண்டு கடிபடவும் செய்வேன். அதைக் கண்டு நீங்கள் பயப்படாவிட்டால் சரி.

உங்கள் வீட்டிற்கு அந்நியர் வந்தால், உங்கள் நாயோடு இணைந்து நானும் குரைப்பேன். குறைந்த அதிர்வெண் கொண்ட ஒலி எனக்குக் கேட்கும். அதை வைத்துத்தான் பூச்சிகள், சிறிய ஊர்வன, பறவைக் குஞ்சுகள் போன்றவற்றின் நடமாட்ட ஒலியைக் கண்டுபிடித்து நான் வேட்டையாடுவது உண்டு. உங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் கோழி இல்லைத்தானே! இருந்தால் அதன் உயிரைக் காப்பாற்ற நீங்கள் எட்டுக்குடி முருகனைத்தான் கும்பிட வேண்டிவரும்.

உங்கள் இல்லத்தில் என்னை அநுமதித்தால், மூன்று வருட காலத்துக்கு ஒருநாள் ஒரு முட்டை தருவதாக நாங்கள் ஒப்பந்தம் கைச்சாத்திட வேண்டும். இல்லாவிட்டால் நான் பரியாக மாறிக் காட்டுக்குள் ஓடிவிடுவேன்.



எனக்கு இங்கு கொஞ்சம் பட்டினிதான். என் ஜாதகத்தை உங்கள் கையில் தர முனைவதற்கு அதுவும் ஒரு காரணம். கொரனா காலத்தில் மனிதர்களே உலகம் முழுவதும் கோடிக்கணக்கில் பஞ்சத்தில் வாடுகிறார்களாம். எனக்குத் தற்செயலாக ஒருநாள் அதிக உணவு கிடைத்தால், மண்ணுக்குக் கீழே அல்லது காய்ந்த சருகுகளுக்கு அடியில் மறைத்து வைப்பேன். எதிர் காலத்துக்காக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்கள் வீட்டுக்கு வரும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறேன். வந்தால் ஒவ்வொரு நாளும் காலையில் உங்களைப் பார்த்துச் சிரிப்பேன். எனது நாற்பத்திரண்டு பல்லும் தெரியும்! உங்களோடு மூக்கு உரசி முத்தம் தருவேன். கண்டவுடன் வாலாட்டுவேன். சந்தோஷம் வந்தால் விரல் நுனியில் நடந்து நான் ஊளையிடும் சத்தத்தை நீங்கள் கட்டாயம் ரசிப்பீர்கள்.

நல்லகாலம் எனக்குப் பிள்ளைகள் இல்லை. இருந்திருந்தால் அவர்களையும் கூட்டிக்கொண்டுதான் வரவேண்டி இருந்திருக்கும்.

கண்ணில் ஒரு துளி நீர் ஓரமாகத் தேங்குகிறது. சந்திப்போம்.

**இப்படிக்கு,**
**பாசமுடன்,**
**நரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. சொண்டுப் பயணம்



விடிந்தது! பொழுதும் ஒரு நிம்மதியற்ற இரவும்! இன்று எனக்கு ஒரு மிக முக்கியமான பயணம் இருப்பதால்தான் அந்தப் பதற்றமான இரவு!

நான் ஒரு பறவை. என்னை ஊரிலே 'கொட்டை வெட்டி' என்று கூப்பிடுவார்கள். ஓம், தாவர வித்துக்களை வெட்டுகிற வேலையை வடிவாகச் செய்வேன். உடலில் புள்ளிகள் இருப்பதாலோ என்னவோ எனது பெயர் அழகாய் இல்லாவிட்டாலும் நான் வடிவுதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது சிநேகிதி விழிமொழி மானிடப் பிள்ளை. அவளது பெயரே அழகு. இங்கிருந்து அவளது ஊருக்கு ஒரு 'பறத்தல்' செய்வதே இன்றைய இலக்கு. தபால் கொண்டு போவது புறாக்கள் என்பது போல, பைன் மர வித்துக்களைப் புதிய இடங்களுக்குப் பரப்பும் வேலை எனக்குக் கைவந்த கலை.

'துணிந்து விட்டால் தலையில் எந்தச் சுமையும் தாங்கலாம்' என்று விழிமொழி பாடுவாள். எனது சுமை சொண்டிலே!

"சொண்டினிலே நீ பயணம் போகையிலே - உனைக்
கண்டு மிகப் பொருமப் போறா நாயுருவி"

என்று குன்றுமணி வித்துக்கு ஒரு எழுத்தாளர் கவிதை எழுதியிருக்கிறாராம். விழிமொழிதான் சொன்னாள்.

நூற்றைம்பது மில்லியன் வருடங்களுக்கு முதல் கூர்ப்படைந்த இந்தப் பைன் மரங்கள் கூட்டமாக நிற்பது ஒரு அழகுதான்!

வட அரைக்கோளம் இவற்றின் பிறப்பிடமாயினும் பிறகு பல நாடுகளுக்கும் பரவிவிட்டார்கள். கடல் மட்டத்திலும் காணப்படுவார்கள். ஐயாயிரம் மீற்றர் உயரமான மலைகளிலும் வளருவார்கள். சராசரி முப்பது மீற்றர் உயரமாக வளருகிற இந்த பூக்காத் தாவரங்கள் எப்போதும் பசுமையாய் இருப்பதாலோ என்னவோ உலகம் முழுவதிலும் வாழ்ந்த எழுத்தாளர்களைக் கவர்ந்திருக்கிறார்கள். இலக்கியக்காரர் இவர்களைப் பற்றி எழுத ஓவியர்கள் சித்திரங்கள் வரைந்திருக்கிறார்கள். பைபிளிலேயே பேசப்படும் மரம் என்பதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய புகழ்தான். கிறிஸ்மஸ் காலத்தில் கிறிஸ்மஸ் மரம் செய்வதற்கு இவர்களின் உதவி பெரிதும் தேவையாயிற்றே!



உலகத்திலே மிக நீண்ட ஆயுள் கொண்ட உயிரினம் என்றும் சொல்லலாம். சராசரியாக நூறு முதல் ஆயிரம் வருஷங்கள் நின்றுபிடிப்பார்கள். கலிபோர்னியாவில் ஒருவர் ஏறத்தாழ ஐயாயிரம் வருஷம் வாழ்ந்தவராம் - சித்தர் போல!

நண்பி விழிமொழிக்கும் 'பைன் மரம்' பிடிக்கும். ஆனாலும் அவள் வாழும் ஊரில் இதுவரை இவர்கள் இல்லை. அதுதான் இந்தப் 'பரப்பல்' வேலையை ஒரு 'பறத்தல்' மூலம் செய்யப்போகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளின் காணியில் இவர்கள் வளர்ந்தால், தண்டு, தட்டுமுட்டுச் சாமான் செய்வதற்கு உதவும். யன்னலுக்குக் கூடப் பாவிக்கலாம். பிசினில் இருந்து தேப்பந்தைலம் செய்யலாம்.

ஒருநாள் நான் விழிமொழியோடு கதைத்துக் கொண்டிருக்கும்போது எனது பிரதேசத்தில் காட்டுத் தீ வந்துவிட்டது. "காட்டுத்தீயால் பெரு நட்டம்" என்று நான் சொன்னேன். "நாங்கள் தப்பிவிடுவோம். விலங்குகள், மனிதர்கள் பாவம்" என்று தொடர்ந்தேன். அப்போது விழிமொழி சொன்னாள் "காட்டுத்தீயால் லாபமும் இருக்கிறது" என்று. "லாபமோ?" என நான் அதிசயித்தேன். "காட்டுத்தீ வந்தால்தான் பைன் மரங்களின் வித்துக்கள் வெடித்துப் பரவும்" என்று அவள் கூறிய போதுதான் பைன் மரங்கள் மீது அவள் காட்டும் அன்பின் எல்லை எனக்குப் புரிந்தது.

"பைன் மரங்கள் பரவட்டும்" என்ற உத்வேகம் குறைய முதல் இலக்கிற்கு அண்மையில் வந்துவிட்டேன். இனி வித்தை நழுவ விடலாம். "இது முளைக்குமா?" சிறு நம்பிக்கை மயக்கம். இந்த இடம் அமில மண்ணாயின் கட்டாயம் முளைத்துவிடும்.

இனி முளைத்து வித்திலைகள் முதல் ஊசியிலைகள் வரை நாலு வகை இலைகள் தோன்றி, மகரந்தச் சேர்க்கை நடந்து, மூன்று வருடத்தின் பின் புதிய வித்துப் பரவி... தனி மரம் தோப்பாகப் பல வருடங்கள் எடுக்கும். அதற்குள் விழிமொழி உயர் வகுப்புக்கு வந்துவிடுவாள்.


என்னை மறந்துவிடுவாளோ?

மறக்க மாட்டாள். நன்றியுள்ள பெண் அவள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. மாசற்றார் கேண்மை



நுங்கும் நுரையுமாகப் பெரும் அட்டகாசம் செய்கிறாள் கடல் மங்கை! மேற்பரப்புக்கு வந்து ஒரு முறை மேலே துள்ளிப் பாய்ந்தேன். நாங்கள் இப்படிப் பாய்வது அழகான காட்சி என்று எங்களைப் படம் பிடிக்க மனிதர்கள் நவீன கைத்தொலைபேசிகளோடு காத்திருக்கிறார்கள். கார்த்திகை முதல் பங்குனி வரையான காலத்தில் இலங்கைக் கடற்கரைகளில் எங்களைப் பார்க்க உல்லாசப் பயணம் வருவோர் அதிகம். எம்மைப் பொறுத்தவரை இப்படிப் பாய்ந்து பாய்ந்து இடம்பெயர்வது சக்தி சேமிக்க உதவும். நீரைவிட வளியில் உராய்வு குறைவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி என்னைப் பார்க்க வருகிற நண்பன் நயனன் வள்ளத்தில் எனக்காகக் காத்திருப்பான். அவன் படிப்பிலே சூரன். எனது விஞ்ஞானப் பெயர் 'ஒடொன்ரோ செற்றி' என்பதாலோ என்னவோ என்னை 'செற்றி' என்று செல்லமாகக் கூப்பிடுவான்.

அவனைக் கண்டவுடன் ஒரு சத்தம் போட்டேன். எனது குரல் அதி உயர் அதிர்வெண் கொண்டதாக இருப்பதால் மனித மனங்களைக் குணப்படுத்துகிறதாம்! அவன்தான் சொன்னான்.

எனக்கும் நயனனுக்கும் சமவயது - எட்டு - என்பதால் அவன் நண்பன்தானே! அவன் இப்போது மூன்றாம் வகுப்புப் படிக்கிறானாம். நான் எனது தலைப்பிள்ளையை சென்ற மாதந்தான் ஈன்றிருந்தேன். என்னைவிடக் கறுப்புத் தோலுடன் என் மகன் மிக அழகு! பத்து மாதம் சுமந்து - இல்லை, இல்லை அது மனிதமொழி - பன்னிரண்டு மாதம் சுமந்து பெற்ற என் குட்டி சுவாசிப்பதற்கு வசதியாக உடனேயே நீரின் மேற்பரப்புக்குக் கொண்டு வந்தேன். அன்றும் நயனன் வள்ளத்தில் இருந்தான்.

ஒரு 'கிரிக்கற் ரீம்' ஆரம்பிக்கக் கூடிய எண்ணிக்கையில் என் நெருங்கிய உறவினர் என்னோடு கூட்டமாக வாழ்ந்தாலும், மகனுக்குப் பால் கொடுப்பது நான்தானே செய்ய வேண்டும்? அது பெரிய வேலைதான்!

நயனனுடைய வள்ளத்துக்குக் கிட்டப்போய் இன்னொரு முறை துள்ளிப் பாய்ந்து அவனுக்குக் காலை வந்தனம் சொன்னேன். எனது முகம் "எப்போதும் சிரித்தபடி" என்று அவனுக்கு என்னிடம் விருப்பம்.


"டொல்பினோடு விளையாடாதே! கவனம்" என்று வள்ளத்தில் இருந்த அவன் அப்பா எச்சரித்தார். நான் நீந்திச் சற்று விலகினேன். "நீந்தும்போது எனது வால் மேலும் கீழும் அசைவது, நான் முலையூட்டி என்பதனாலாம்" என்று நயனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தைக்கு விளக்குகிறான். மற்றைய மீன்களில் அது பக்கத்திற்கு அசையுமாம். உண்மைதானே! மீன்களுக்குப் புத்தி மட்டு! எங்களுக்கு நல்ல நுண்மதி.

நயனன் இன்று வலை போட்டிருக்கிறான். அதில் சின்ன மீன்கள் அகப்பட நான் உதவி செய்ய வேண்டும். அவனிடம் எனக்கு அன்பும் ஒத்துணர்வும் இருப்பதை வேறு எப்படிக் காட்டுவது?



மகன் எனக்குப் பின்னாலும் முன்னாலும் திரிகிறான். பாவம். பயந்தவன். எங்கள் கூட்டுக் குடும்பம் அவனுக்குப் போதிய பாதுகாப்புக் கொடுக்கும். இருந்தும் ஏழெட்டு வருடம் என்னுடன் திரியப் போகிறான் போல இருக்கிறது.

ஆ... ஒரு மீனார் வருகிறார்! அவரைப் பிடித்துப் பற்களுக்குள் நசித்து விழுங்குவோம். காலை உணவுக்குப் போதும். எனக்குக் கீழ்வாயில் நூறுக்கு மேற்பட்ட குட்டிக் குட்டிப் பற்கள்! அவர் எப்படித் தப்ப முடியும்? இந்த மெல்லிய காலை உணவு எனக்குப் போதும்!

பின்னால் ஒரு மீன்கூட்டமே வருகிறார்கள்! நான் அப்படியே ஒரு திரும்பல் திரும்பி மீன்கூட்டத்தை நயனனின் வலைப் பக்கம் தள்ளப் போகிறேன். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைவுக்குத் தேவையான திசைக் கட்டுப்பாட்டையும், நீருக்குள் எனது உடலுக்கான ஸ்திரத் தன்மையையும் தருவதற்குத்தான் எனக்குப் புறப்பக்கச் செட்டை இருக்கிறதே!

மீன்கூட்டம் வருவது மணக்கிறதா என்று பார்க்கிறேன். ம்... ஹூம்... மணக்கவில்லை. எனக்கு மணம் பிடிக்கிறது கஷ்டந்தான். அதில் எனது கெட்டித்தனம் 'கம்மி'தான்!

ஆனால் அவர்கள் வரும் சத்தம் கேட்கிறது. எனது புறக்காதுத் துவாரம் சிறியது என்றாலும் ஒலி எனது எலும்புகளுக்கூடாகக் கடத்தப்பட்டு நடுக்காதுக்கும் உட்செவிக்கும் வந்துவிட்டது.

ஆ... அருகில் வந்துவிட்டார்கள்! நீரைச் சுழற்றி ஒரு அடி அடித்தேன். அவ்வளவு பேரும் போய் நயனனின் வலையில் விழுந்திருப்பார்கள். இல்லாவிட்டால் எனது உடலில் இருபது அடி நீளமும் ஆறு தொன் நிறையும் இருந்து என்னதான் பயன்?

இன்று என் சிநேகிதனுக்கும் அவனது குடும்பத்திற்கும் நல்ல வருமானம் கிடைக்கும்.

"மருவுக மாசற்றார் கேண்மை" என்று என்னைப் போன்றவர்களின் நட்பைத்தான் வள்ளுவர் சொன்னவர். மனிதர்களுக்கு அது தெரியாவிட்டாலும் எனக்குத் தெரியும்.


வேகமாக ஓடியது போல மூச்சிரைக்கிறது எனக்கு! ஒரு செங்கோணப் பார்வையில் என்னைப் பார்த்தான் நயனன்.

பெரு மழையைக் கொண்டு வரப்போவதாய் மிரட்டிக்கொண்டிருந்த வானம் திடீரென்று நிர்மலமானது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. முருகைக் கல்லாருடன் ஒரு பேட்டி



நயனா: நீங்கள் உலகத்திலே மிக முக்கியமான ஆள். அதே நேரம் மிகப் பிரபலமான கல்லார். அதனால் உலகத்தின் மிகப் புகழ் பூத்த பத்திரிகையான "சிறுவர் உலகம்" ஆசிரிய பீடத்திலிருந்து உங்களைப் பேட்டி காண வந்திருக்கிறேன்.

முருகைக்கல்: வணக்கம். எதனால் என்னை முக்கியமான ஆள் என்று சொல்கிறீர்கள்? நான் என்பாட்டில் அமைதியாகக் கடலில் இருக்கிறேன்.

நயனா: உப்பு நீரில் வாழ்கின்ற மொத்த உயிரினங்களில் இருபத்தெட்டு வீதமானோருக்கு நீங்கள் வீட்டுத்திட்டம் வழங்கியிருக்கிறீர்கள். மீன்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொலஸ்கா, புழுக்கள், கிரத்தேசியா, தோன் முள்ளிகள், கடற்பஞ்சுகள், குழிக்குடலிகள் என்று பலர் இதற்குள் அடங்குவார்கள். நீங்கள் எங்கள் நாட்டில் ஒருவராக இருந்திருந்தால் இதைச் சொல்லியே ஒரு அமைச்சராக வந்திருக்கலாம்.

**முருகைக்கல்:** அப்படியா? நான் அவ்வளவு பிரபலமா? எனக்கு முகப்புத்தக நண்பர் ஒருவரும் இல்லையே!

**நயனு:** நீங்கள் நானூற்று எண்பத்தைந்து மில்லியன் வருடங்களுக்கு முதல் தோன்றிய உயிர் அதை விடப் பிரபலம் வேறு என்ன வேண்டும்?

**முருகைக்கல்:** என்னை என்ன கேள்வி கேட்கப்போகிறீர்கள்?

**நயனு:** நீங்கள் அமைக்கும் கல் வடிவங்கள் பல்வேறு இடங்களிலும் பல்வேறு மாதிரி இருக்கிறதே! அதற்கு என்ன காரணம்? உங்கள் கற்பனையா?

**முருகைக்கல்:** ஓ! அது கீழே அமைந்துள்ள தளத்தின் தன்மையைப் பொறுத்தது. "நீர் அளவே ஆகுமாம் நீராம்பல்" என்றார் ஔவைக்கிழவி.

**நயனு:** நீங்கள் பெருங்கூட்டமாக வாழுகிற முதுகெலும்பில்லாத சமூகம் (எங்களைப் போல) என்று எனக்குத் தெரியும். தனி ஒருவர் எப்படி இருப்பீர்கள்? முகப்புத்தகத்தில் உங்கள் படம் இல்லையே?

**முருகைக்கல்:** தனி ஒரு பொலிப்பு சாக்கு மாதிரி இருப்பேன். இரண்டு மூன்று சென்ரிமீற்றர் உயரம்; இரண்டு மூன்று மில்லிமீற்றர் விட்டம். வாயைச் சுற்றிப் பரிசக் கொம்புகள் இருக்கும். ஆள் 'சாக்கு' இல்லை. பரிசக் கொம்புகளின் உதவியோடு சாப்பாடு தேடிப் போடுவேன்.

**நயனு:** மனித சமூகம் 'கொரனா' மாதிரி நோய்களால் அழிந்துபோகப் போகிறோம் என்று எங்களுக்குப் பயம் வரத் தொடங்கிவிட்டது. உங்களுக்கும் அது போன்ற பயம் இருக்கிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முருகைக்கல்:** இருக்கிறது. உயர்ந்து வரும் புவி வெப்பநிலை எங்களுக்குப் பிரச்சினைதான். நீங்கள் அளவுக்கு அதிகமாக மீன் பிடிப்பது, கடல் அமிலமயமாதல், உங்களால் வரும் நைதரசன், பொசுபரசுக் கழிவுகள் நீரில் கலப்பது... நாங்கள் அழியத்தான் போகிறோம். என்ன செய்வது? கடவுள் உங்களுக்கு மூளையைப் படைக்கவில்லையே!




**நயனு:** வெப்பநிலை உயர்வு உங்களுக்கு நெருக்கீடா?

**முருகைக்கல்:** நெருக்கீடுதான். ஆனாலும் நாங்கள் உங்களைப் போல மதுவும், போதையும் பாவிக்க மாட்டோம். எங்களோடு இருக்கிற சூசாந்தலேக்களைப் பிடித்துத் தள்ளிவிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நயனு:** அவர்கள்தான் உங்களுக்குச் சிலவேளை சக்தி தருவார்கள். நிறம் தந்து உங்களை அழகு படுத்துபவர்கள்.

**முருகைக்கல்:** உண்மைதான். நீங்கள் கெட்டிக்காரப்பிள்ளை போல இருக்கிறது. உங்களுக்குப் பல விடயங்கள் தெரிந்துள்ளன.

அவர்கள் நாங்கள் வெளிவிடும் காபனீரொட்சைட்டைப் பாவித்துத்தான் சாப்பாடு செய்வார்கள். சந்தோஷமாக இருந்தால் நாங்களும் அவர்களோடு நல்ல உறவு பேணுவோம். கஷ்டம் வந்தால் என்ன செய்வது?

**நயனு:** மிக அருமையான பேட்டி தந்தீர்கள். உங்களுக்கு நன்றி சொல்லி விடை பெறப்போகிறேன்.

**முருகைக்கல்:** நீங்கள் என்னைத் தேடி வந்து கதைத்ததற்கும் என்னைப் படம் எடுத்து உங்கள் பத்திரிகையில் போடுவதற்கும் நானும் நன்றி சொல்ல வேண்டும். நன்றி உணர்வோடு வாழ்பவர்களுக்கு உளநலம் அதிகரிக்கும். போய் வாருங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. கிள்ளை மொழி



வழி நெடுகிலும் காற்றில் சல சலக்கும் மரங்கள்! மார்கழிக் குளிர்! கதகதப்பாய் இருக்கிறது.

விசாலமான அந்தப் பழைய வீட்டின் பின்புறம் நின்றிருந்த தென்னை மரம் யுத்த காலக் குண்டு வீச்சில் பட்டுப்போனதால், அதன் உச்சியில் இருந்த பொந்துதான் இப்போது எனது வீடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் - எனது என்பதைவிட, பசுந்தி - பஞ்சவர்ணக் கிளி என்றால் அழுத்தமாயிருக்கும். இல்லையா?

நான் இப்போது எனது வீட்டிலிருந்து நயனி வீட்டு முற்றத்திற்குப் பறந்து போகிறேன். அந்த முற்றத்தில் பதிவான கிளைகளுடன் பரந்திருக்கும் வேப்ப மரத்தில் உட்கார எனக்குப் பிடிக்கும். அங்கே பூக்கள், பழங்கள், வித்துக்கள், பூச்சி புழுக்கள் உணவாகக் கிடைக்கும் என்பதற்கு மேல், நயனி முற்றத்தில் நின்று விளையாடுவாள். என்னைக் கண்டவுடன், "பசுந்தி!" என்று கூப்பிடுவாள்.

முதல் நாள் அவள் என்னைப் பார்த்ததும், கண்களை அகல விரித்ததும், முகம் மலர்ந்ததும், "பசுந்தி!" என்று கூப்பிட்டதும் - எனக்கு நல்ல நினைவாக இருக்கிறது. அன்று கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திர நாள்! அவளுடைய அந்த முதல் காந்தப் பார்வையில் நான் காலியாகிப் போனேன்.

"நல்ல வடிவான கிளிக்குஞ்சு, பசுந்தி" என்று தன் தாயாரிடம் கூறினாள் நயனி.

"குஞ்சா? எனக்கு இப்போது இருபத்தைந்து வயது" என்று மனதில் நினைத்துச் சிரித்துக் கொண்டேன் நான்.

"இம்முறை நான் ஐந்து முட்டை போட்டிருக்கிறேன். அவை பொரிக்க இன்னும் இருபது நாளாகும். நானும் அம்மாதான்..." என்றெல்லாம் சொல்ல வேண்டும் என நினைப்பேன். அவ்வளவு சிக்கலாக மொழியைப் பாவிக்க எனக்கு முடியாது.

நயனியும் அவளது வீட்டாரும் என்னைப் "பசுந்தி, பசுந்தி!" என்று பல தடவை கூப்பிட்டதில் இப்போது எனக்கு அந்தச் சொல்லைப் பாவனை செய்ய முடியும். நானும், "பசுந்தி" என்று கூப்பிடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“எனக்குப் பெயர் நயனி. பசுந்தி இல்லை” என்று கூறிச் சிரிப்பாள் அவள். அவளின் சிரிப்பு மிக அழகானது. நிரந்தரப்பல் முளைப்பதற்காக முன் வாயின் கீழ்முரசில் வேட்டைப்பல் விழுந்திருக்கும் இடைவெளியுடன் அந்தச் சிரிப்பு இன்னும் அற்புதமானது.

என்னுடைய இறகின் நிறங்கள் அவளுக்குப் பிடிக்கும். ஒருநாள் என்னைப் பார்த்து ஓவியம் வரைந்தாள். கொண்டு வந்து எனக்குக் காட்டி “உனக்கு ‘வைபரில்’ அனுப்புகிறேன் பார் பசுந்தி” என்றாள்.



இப்போது நான் ‘பார்’ என்ற சொல்லையும் பாவனை செய்யப் பழகிக் கொண்டேன். ‘பசுந்தி பார்’ என்று சொல்லிக் கொண்டிருப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயனி சிறு சிறு புத்தகங்கள் நிறைய வாசிப்பாள். முற்றத்தில் இருந்து வாசிப்பதை நான் பலமுறை பார்த்தேன். "பசுந்தி உன்னுடைய இந்த அழகான நிறங்கள், பச்சை, நீலம், சிவப்பு எல்லாம் நிறப் பொருளாலும் வரலாம். ஒளி முறிவாலும் வரலாம்." என்று ஒருநாள் சொன்னாள். ஏதோ ஒரு நூலில் வாசித்திருக்கலாம்.

இன்று நயனி தனது வயதை ஒத்த மூன்று பிள்ளைகளோடு முற்றத்தில், "குண்டுக்காய்" விளையாடுகிறாள். அவர்களில் நயனியின் முகம் எனக்கு நன்கு தெரியும். நான் வேப்ப மரக் கிளையில் அமர்ந்து, "பசுந்தி - பார்" என்றேன். எல்லோரும் சிரித்தார்கள்.

நயனி எனக்கு ஒரு கொவ்வைப் பழம் எறிந்தாள். சிவப்புச் சொண்டால் நான் அதைக் கொத்திக் கொண்டு பொந்துக்கு வருகிறேன். அங்கே எனது கணவர், முட்டைகள் மேல் உட்கார்ந்திருப்பார். அவரை மாறி விடவேண்டும். அவரும் உணவுக்குப் போகவேண்டும்.

நயனியை அவளது பெற்றோர் அன்புடன் வளர்ப்பது போலத்தான் நாங்களும் எங்கள் குஞ்சுகளைக் கவனிக்க வேண்டும்.

நாள்கள் கடந்து போகின்றன. இப்போது நயனி வீட்டு வளவில் பயற்றங்கொடி போட்டிருக்கிறார்கள். கொரோனாக் காலம் என்பதால் எல்லோரும் வீட்டுத்தோட்டம் செய்கிறார்கள்.

இன்று மாலை நான் நயனி வீட்டு முற்றம் போனபோது, அவள் ஒரு கவிதை எழுதித் தன் நண்பர்களுக்கு வாசிக்கிறாள்.

"பட்டாம் பூச்சிகள் பாறாங்கல் சுமப்பதா?
சுட்டிக் குழந்தைகள் சுமைதாங்கி ஆவதா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைவிட ஒரு பட்டாம்பூச்சி மேல் அவளுக்கு அன்பு வந்துவிட்டதோ என்று ஒரு கணம் கவலைப் பட்டேன். அன்று நான் திரும்பிப் பொந்துக்கு வந்தபோது, என்னுடைய முட்டைகள் பொரித்து விட்டன. சின்னச் சின்ன மயிர்க்கட்டுகளைக் கொண்ட தோலோடு பஞ்சு மாதிரி என் குஞ்சுகள். அவர்களுக்கு இரண்டு கிழமைக்குக் கண் தெரியாது. அம்மாவைப் பார்க்க மாட்டார்கள்.

அன்று இரவு கணவர் நிறையவே பயற்றம் வித்துக்கள் கொண்டு வந்தார். குஞ்சுகள் பொரித்த சந்தோஷத்தை விசேட இரவுணவுடன் கொண்டாடினோம். கொரோனா காலத்திலும் நாங்கள் முகத்திரை இல்லாமல் விருந்து வைக்கலாம். நாங்கள் மனிதர்கள் இல்லைத்தானே!

'ஜிலு ஜிலு' என்று காற்று வீசுகிறது. 'கிலு கிலு' என்று எமது சத்தம். எங்கள் சொண்டுகள் வலிமையானவை என்பதால் பயற்றம் வித்துக்களை உடைத்து உண்டு மகிழ்ந்தோம்.

அடுத்த நாள், "பசுந்தி, குஞ்சு" என்று நான் பாவனை செய்தேன்.

"குஞ்சுவாம் குஞ்சு பொரித்துவிட்டதோ?" என்று நயனி தாயாரைக் கேட்டாள்.

என்னைப் போன்ற இறகு வளர என்னுடைய குஞ்சுகளுக்கு இன்னும் மூன்று வாரமாகும். அதன் பின் அவர்களைக் கூட்டி வந்து நயனிக்கு அறிமுகம் செய்யவேண்டும் என்று நினைத்த நான், "பசுந்தி, பார், குஞ்சு" என்றேன்.

வில் போன்ற புருவம் மேலும் குறுக அம்பு தரும் வீச்சுடன் என்னைப் பார்த்தாள் நயனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயன் தெரி நன்றி

* அணிந்துரை தந்துதவிய மூத்த எழுத்தாளர், மருத்துவர், தமிழ் இலக்கியப் பரப்பின் சிறந்த விமர்சகர் எம்.கே. முருகானந்தன் அவர்களுக்கு,
* கதைகளுக்கான சித்திரங்கள் வரைந்த நயனுக்குட்டிக்கும், குடும்பத்தினருக்கும்,
* வழக்கம் போல மிகுந்த கவனத்துடன் உழைத்த அம்மா அச்சகத்தினருக்கு,
* நூலை வெளியிடும் சோலைக்குயில் அவைக்காற்றுக்கள உறுப்பினர்களுக்கு,
* வாசிக்கப் போகும் மாணவச் செல்வங்களுக்கு,

17-11-2020

**கோகிலா மகேந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுவர்கள் சலிப்பின்றி வாசிப்பதற்கு ஏற்ப இக்கதைகளைச் சுவாரஸ்யமாகச் சொல்லிச் செல்கிறார் ஆசிரியர். முடிச்சவிழ்ப்பது போலச் சொல்லப்பட்ட "நான் யார்"? கதையில் மட்டுமன்றி, அனைத்துக் கதைகளிலும் அவர்களை வியக்க வைத்து, ஆர்வத்தைத் தூண்டுவதுடன் தொடர்ந்து வாசிக்க வைக்கும் சுவாரஸ்யமான தகவல்கள் ஊடாகவும் அவர்களின் ஈடுபாட்டைத் தக்க வைத்துக் கொள்கிறார்.

நிறைய விஞ்ஞானத் தகவல்களும் அறிவியல் உண்மைகளும் கதையோடு கதையாகப் பின்னிப் பிணைந்து வருவதால் சிறுவர்களின் அறிவு விசாலிப்பை ஏற்படுத்துவதுடன் புதிய தேடல்களையும் ஊக்குவிக்கவே செய்யும். கதையோட்டத்தில் மூழ்கிக் கிடக்கும் முதல் வாசிப்பில் அவை குழந்தைகளின் கவனத்தைப் பெறாதுவிட்டாலும் மறு வாசிப்பில் அவை நிச்சயமாக மூளையில் பதியவே செய்யும் என்பதை உணர்ந்து எழுதப் பட்டதாகவே கருத முடிகிறது.

வைத்தியகலாநிதி எம். கே. முருகானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org